# ஆண்டுதோறும் 1,000 தாதியர்களுக்குப் பயிற்சி

ஒருங்கிணைந்த பராமரிப்பு நிலையத்தை நன்யாங் பலதுறை தொழில் கல்லூரி அதிகாரபூர்வ மாக தொடங்கி இருக்கிறது.

சிங்கப்பூரில் மக்கள் தொகை மூப்படைந்து வருவதால் அதற்கு கேற்ப பயிற்சி அளித்து தாதி யர்களை உருவாக்க இந்த நிலை யம் உதவும்.

நினைவாற்றல் குறைபாட்டு டன் வாழ்ந்துவரும் மூத்த குடி மக்களிடம் இந்தப் புதிய நிலையம் ஒருமித்த கவனம் செலுத்தும். இவர்களே இதன் இலக்காக இருப்பார்கள்.

சிங்கப்பூரில் 2030வது ஆண்டு வாக்கில் நான்கு பேரில் ஒருவருக்கு குறைந்தது 65 வயதாகிவிடும்.

நினைவாற்றல் பாதிப்பு உள்ளவர்களின் எண்ணிக்கை அப்போது 103,000 பேராகிவிடும் என்று தெரிகிறது.

புதிய நிலையத்தில் ஆண்டு தோறும் 1,000 தாதியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் முதல்வரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான திருவாட்டி ஜெனி லியூ, எதிர்கால சுகாதார பராமரிப்பு மற்றும் சமூகப் பரா மரிப்பு நிபுணர்கள், உயர் தொழில் நுட்பச்சூழலில் நல்ல ஆற்றலுடன் செயல்படுவதை உறுதிப்படுத் தும் வகையில், இந்தக் கல்வி நிலையத்தின் சுகாதார அறிவியல் துறை, தொடர்ந்து புத்தாக்கங் களை நாடி துடிப்புடன் செயல் பட்டு வருவதாக தெரிவித்தார்.